"இப்பதிப்பிற்குப் பின் எனது நண்பர் திருவாளர். கா. நமச்சிவாய முதலியாரவர்களால் மூலப்பதிப்பு ஒன்று அச்சிடப்பட்டது. அப்பதிப்பு வெளிவந்ததாகத் தெரியவில்லை. பின்னர் 1930-ல், புரசை பாக்கத்திலிருந்து எனது நண்பர் திரு. டி. என். சேஷாசல ஐயரவர்களால் வெளியிடப்பட்ட 'கலா நிலயத்தில்', திரு. இராம ரத்னமையரவர்கள் தாம் எழுதிய புத்துரையுடன் ஒரு பதிப்பு வெளியிட்டனர். இது தனிப் புத்தகமாக வெளிவரவில்லை. இப்பதிப்பிற்குப் பின்னர் 1933-ல் வித்துவான் சோ. அருணசல தேசிகரவர்களால் மூலம் மாத்திரம் பதிப்பிக்கப்பட்டது."

அதன் பின்னர்:

குறுந்தொகை மூலமுமுரையும்

உ. வே. சாமிநாதையர்.

முதற்பதிப்பு 1937. இரண்டாம் பதிப்பு 1937. விலை ரூ. 12/- 111+880 பக்கங்கள்.

நூல்,
1. நூற் பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி,
2. இந்நூலால் அறிந்து கொள்ளக்கூடிய முக்கியமான செய்திகள்
3. பாடினோர் வரலாறு,
4. பிழையும் திருத்தமும்,
5. குறுந்தொகை மூலமும் உரையும்,
6. செய்யுள் முதற்குறிப்பகராதி,
7. அரும்பத முதலியவற்றின் அகராதி,
8. எடுத்துக் கொண்ட நூல்கள். என்ற முறையில் அமைக்கப் பட்டுள்ளது.

'குறுந்தொகை'

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. முதற்பதிப்பு 1955. மறுபதிப்பு 1961. விலை ரூ. 9/- 36+656 பக்கங்கள்.

கழகத்தின் 783-ஆம் வெளியீடாக பெருமழைப் புலவர். திரு. பொ. வே. சோமசுந்தரனார் எழுதிய உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

பதிப்புரை — அணிந்துரை — பாடிய சான்றோர் — கடவுள் வாழ்த்து — நூல் — செய்யுள் முதற்குறிப்பகராதி — அருஞ்சொற் பொருள் அகராதி என்ற ஏழு பகுதிகளைக் கொண்டது.

குறுந்தொகை

(மூலம் மட்டும்)

S. ராஜம் பதிப்பு. மர்ரே & கம்பெனி. சென்னை. முதற்பதிப்பு 1957.

குறுந்தொகை

(தெளிவுரையுடன்)

புலியூர்க் கேசிகன். மலிவுப்பதிப்பு. விலை. ரூ. 4-00

குறுந்தொகை

— வித்வான். இரா. சிவ. சாம்பசிவன்

செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 12, சிலம்பு 13-ம் தொகுதிகளில் 15 பாடல்களுக்கு உரை விளக்கம் தந்துள்ளார்.

12-ஆம் சிலம்பில் பக்கம் — 455, 503, 543.

13-ஆம் சிலம்பில் பக்கம் — 65, 214, 247, 303, 367, 412.

ஆசிரியர் — அகர வரிசை

English

நூற்கள்

குறிஞ்சித்தேன்:— கி. வ. ஜகந்நாதன்.

அமுத நிலையம். சென்னை-18. முதற்பதிப்பு 1952 செப். விலை. ரூ. 3. 110 பக்கங்கள்.

குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துப்பாடல், குறுந்தொகை 2, 3, 20, 21, 23, 41. என்று ஏழுபடல்களுக்கு விளக்கம் கூறும் ஏழு கட்டுரைகள் கொண்டது. குறுந்தொகைப் பாடல்கள் சிலவற்றையேனும் தமிழ் மக்கள் கற்று உணர்ந்து மகிழ்தற்காகவே தாம் இந்நூல் யாத்ததாக ஆசிரியர் தமது முன்னுரையில் குறிப்பிடுகின்றார். ஒவ்வொரு கட்டுரையிலும் கற்பனையான ஒரு கதையைக் கூறி அதன் மூலம் பாடலின் சூழலை விளக்கிப் பின் பாடலை அப்படியே தருகின்றார். சில கட்டுரைகளில் நாடக முறையில் உரையாடல்கள் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பு.

2. **குறுந்தொகைச் செல்வம்:—** டாக்டர். மு. வரதராசன்.

பாரிநிலையம். சென்னை. முதற்பதிப்பு. 1955 மார்ச். விலை. ரூ. 2-25. 180 பக்கங்கள்.

குறுந்தொகைப் பாடல்களைக் கற்றுப் பயன்பெற முயல்வதாயின் அப்பாடல்களின் சொல்நடையில் பயிலுதல் வேண்டும். அவற்றைப் பாடிய புலவர் பெருமக்கள் மலையிலும் காட்டிலும் வயலிலும் கடற்கரையிலும் கண்ட காட்சிகளை நாமும் கண்டு பழகுதல் வேண்டும். அவற்றின் அனுபவம் கொண்டு காணமுடியாத பல காட்சிகளையும் கற்பனை செய்து உணர்தல் வேண்டும். அவர்கள் பாராட்டிப் போற்றிய அழகுகளை நாமும் போற்றிப் பயிலுதல் வேண்டும். அவர்கள் ஆய்ந்து உணர்ந்த உள்ளத்து உணர்வுகளை நாமும் உணர்ந்து மகிழ்தல் வேண்டும், இவ்வளவும் கலைச் செல்வமாகக் கொண்டு போற்றிய பின்னரே இப்பாட்டுகள் விருந்தாக விளங்கி இன்பம் பயப்பனவாகும் என்று கூறி அதற்குத் துணை புரியும் வகையில் 15 தலைப்புக்களில் 100 க்கும் மேலான குறுந்தொகைப் பாடல்களை விளக்கி விருந்து படைக்கிறார் நூலாசிரியர். ஒவ்வொரு கட்டுரையிலும் சில பாடல்களை எடுத்து அவைகளை ஒன்றோடொன்று தொடர்பு படுத்தி அப்பாடல்களின் மூலம் பண்டைத் தமிழரின் வாழ்க்கை முறைகளை, நம்பிக்கைகளைச் சுட்டிச் செல்கின்றார் ஆசிரியர். தனிப் பாடல்களுக்கு விளக்கம் தரும் பிற நூற்களினின்றும் மாறுபட்டதாக அமையும் முதல் நூல்.

3. **குறுந்தொகைச் சொற்பொழிவுகள்**

1940-ஆம் ஆண்டு நவம்பர் 30, டிசம்பர் 1 ஆம் நாட்களில் சென்னையில்
நடைபெற்ற குறுந்தொகை மாநாட்டுச் சொற்பொழிவுகள்.
கழக வெளியீடு. முதற்பதிப்பு 1940 நவ. விலை. ரூ. 2—4—0.

நூலில் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்களின் தலைமையுரையோடு, குறுந்தொகையில் அமைந்த நெய்தல், முல்லை, பாலை, மருதம், குறிஞ்சி என்ற ஐந்து திணைகளுக்கும் ஐந்து கட்டுரைகளாக மொத்தம் ஆறு கட்டுரைகள் அடங்கியுள்ளன. இக்கட்டுரைகளை எழுதியவர்கள்; நெய்தல் — வித்வான். சிவ. சாம்பசிவ சர்மா, முல்லை — ஔவை. சு. துரைசாமி பிள்ளை, பாலை — மு. இராச மாணிக்கனார், மருதம் —

பண்டிதர். லெ. ப. கரு. இராமநாதன், குறிஞ்சி — வித்வான். பா. சொக்கலிங்கம் என்போராவர். குறுந்தொகை பற்றியுள்ள எல்லாச் செய்திகளையும் தொகுத்துத்தரும் தெளிவான, முழுமையான முதனூல் இதுவேயாகும்.

4. குறுந்தொகை விருந்து

கோம்பை. அ. சுருளாண்டிப் பாவலர், கோம்பைத் தமிழ் இல்லம். கோம்பை.
முதற்பதிப்பு 1951. விலை. ரூ. 1

குறுந்தொகையின் சில பாடல்களைத் தனித் தனிக் கட்டுரைகளாக்கிப் பட விளக்கத்துடன் தந்துள்ளார். 'மடல் ஏறல்' என்பது முதல் 'அன்றிலும் பேடும்' என்பது வரை இருபத்து நான்கு தலைப்புக்களில் கட்டுரைகள் அமைந்துள்ளன.

ஒவ்வொரு கட்டுரையிலும் பாடல் துறையின் விளக்கமும், அதையடுத்து பாடற்பொருளும் தரப்பட்டுள்ளது. சங்குப் பாவலர் என்பவரின் பயிரமும், வித்வான். நாராயணசாமி பாரதி அவர்களின் அணிந்துரையும் இந்நூலுக்குண்டு.

5. குறுந்தொகை விருந்து

டாக்டர். மு. வரதராசன். பாரி நிலையம், சென்னை.
முதற் பதிப்பு 1956 ஏப். விலை 1-8-0. 112 பக்கங்கள்.

மொத்தம் 100 கட்டுரைகளில் 100 குறுந்தொகைப் பாடல்களின் விளக்கத்தைத் தருகின்றார் ஆசிரியர். ஒவ்வொரு கட்டுரையிலும், முதலில் பாடல் எழுந்த சூழலை விளக்கி, அதன்பின் பாடலின் விளக்கத்தைக் கூறி இறுதியாகப் பாடலையும் அப்படியே தருகின்றார் ஆசிரியர். ஒவ்வொரு கட்டுரையிலும் அடிக்குறிப்பாக எடுத்துக் கொண்ட பாடலின் எண், ஆசிரியர் பெயர், அரும்பத விளக்கம் என்பவையும் அமைகின்றன. மக்களுக்குக் குறுந்தொகையை அறிமுகப்படுத்தும் ஒரு முயற்சியை இங்குக் காண்கின்றோம்.

6. குறுந்தொகை விளக்கம்:— ரா. இராகவையங்கார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு. முதற் பதிப்பு 1947.

குறுந்தொகையின் முதல் 111 பாடல்களுக்கு விளக்கவுரை செய்யப்பட்டுள்ள இந்நூலில் முதல் 20 பக்கங்களில் அ. சிதம்பரநாதம் செட்டியாரின் அரிய முகவுரை அமைந்துள்ளது.

நூலின் உள்ளே, இதற்கு முன் எழுதப்பட்ட குறுந்தொகை உரைகளில் குறிப்பிடப்படாத பாடபேதங்களை இராகவையங்கார் உய்த்துணர்ந்து வெளியிட்டுள்ளார். அவற்றில் எவ்வெப் பாடபேதங்கள் பொருந்தும், எவை எவை பொருந்தாதவை என்பவற்றைப் பற்றியும், எவ்வெப் பாடல்களின் உரை சிறக்கின்றன என்பவற்றையும் ஆய்ந்து தமது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் திரு. செட்டியார்.

7. கொங்குதேர் வாழ்க்கை: டாக்டர். மு. வரதராசன்.

பாரி நிலையம் சென்னை. 1. முதற்பதிப்பு 1963. விலை. ரூ. 1/- 73 பக்கங்கள்.
குறுந்தொகை இரண்டாம் பாட்டைப் பற்றிய ஆய்வு நூல்.

'கொங்குதேர் வாழ்க்கை' என்ற குறுந்தொகை இரண்டாம் பாட்டு, வறுமையில் வாடிய தருமியின் பொருட்டு இறைவன் அளித்ததென்ற கருத்து புராணங்களில் காணப்படுகின்றது. இது எந்த அளவிற்குப் பொருந்தும்? பாண்டியனின் ஐயம் போக்குதற்கு இப்பாடல் எழுதப்பட்டதெனின் 'நறியவும் உளவோ நீயறியும் பூவே' என்று முடியும் இப்பாடல் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா இல்லையா என்பதற்கு ஒரு தெளிவான விடையை உட்கொண்டுள்ளதெனக் கூறமுடியாது. உண்மையில் இறையனுர் என்ற இயற்பெயர் கொண்ட புலவரொருவர் காதல் என்ற உணர்வை, மிகச்சிறந்த கற்பனை நயதோடும் உள்ளது புணர்ந்தும் எழுதியதே இப்பாடல். இத்தகைய கற்பனை நயத்தை விட்டு விட்டு பாட்டை ஒரு வரலாற்றேடு, புராணத்தோடு இணைப்பது பொருந்தாது. கற்பனை நயமிக்க பாடல்கள் பல எழுதிய நக்கீரர், கற்பனை நயமிக்க இப்பாடலில் குற்றம் உள்ளது என்று கூறினர் என்று கூறும் கருத்து எத்துணை பொருந்தும்? என்று கூறி இறுதியாக பாடலின் ஒவ்வொரு சொல்லையும் விளக்கிப் பொருள் கூறி நூலை முடிக்கின்றூர் டாகடர். மு. வ.

8. சங்க இலக்கிய இன்கவித்திரட்டு

முதற்பாகம். — இளவழகனுர். கழக வெளியீடு. முதற்பதிப்பு 1940 ஆகஸ்ட்
விலை. ரூ. 3/- 220 பக்கங்கள்.

சங்க இலக்கியங்களிலிருந்து சிறந்த சில பாடல்களுக்குத் தனித்தனித் தலைப்பில் விளக்கம் தருவதாயமையும் இந்நூலில், குறுந்தொகை 3, 20, 40, 42, 43, 57, 130, 131, 134, 137, 152, 167, 187, 203, 283, 315, 373 ஆகிய பாடல்களுக்கு விளக்கமும் அரும்பதவுரையும் தரப்பட்டுள்ளது.

9. சங்க இலக்கிய இன்கவித்திரட்டு

இரண்டாம் பாகம் — இளவழகனுர்.
கழக வெளியீடு. முதற் பதிப்பு 1945 ஜனவரி. விலை. ரூ. 3/- 228 பக்கங்கள்.

இந்நூலில், குறுந்தொகை 23, 28, 29, 95, 99, 132, 156, 184, 196, 202, 203, 234, 270, 356, 366, 393, 399 ஆகிய பாடல்களுக்கு விளக்கமும் அரும்பதவுரையும் தரப்பட்டுள்ளது.

10. சங்ககால இலக்கியச் சிறப்புப் பெயர்கள் டாக்டர். அ. துரை. அரங்கசாமி.
பாரிநிலையம். சென்னை. முதற்பதிப்பு 1960. விலை. ரூ. 7/-

சங்கப் புலவர்களில் சிறப்புப் பெயர் பெற்றவர் தம் பெயர்களை இந்நூல் ஆய்கின்றது. குறுந்தொகைப் புலவர்களின் பெயர்களை, உருவங்கள் இயற்பெயராக

வருதல், உவமைகள் இயற்பெயராக வருதல், சொற்றொடர்கள் இயற்பெயராக வருதல், விரிவான பொதுவகையால் அமைந்த பெயர் என்று நான்காகப் பகுக்கிறார்.

உருவங்கள் — கங்குல் வெள்ளத்தார், பதடிவைகலார், கூகைக் கோழியார்.

உவமை — அணிலாடு முன்றிலார், கயமனார், கல்பொரு சிறுநுரையார், கவை மகன், காலெறிகடிகையார், குப்பைக்கோழியார், குறிஇறையார், செம்புலப் பெயனீரார், மீன்எறி தூண்டிலார், விட்டக் குதிரையார், வில்லக விரல்.

சொற்றொடர் — எயிற்றியனார், ஓரிற்பிச்சையார், கள்ளில் ஆத்திரையனார், நெடு வெண்ணிலவினார், பொன்மணியார், ஓரம் போகியார், காமஞ்சேர் குளத்தார், நரிவெரூஉத்தலையார், தேரதரன், பார் காப்பான், பூங்கண் உத்திரையார், கூவல்மைந்தன், கதவனார்.

பொதுவகை — நெய்தல் கார்க்கியார், காக்கை பாடினியார், வெறிபாடிய காமக் கண்ணியார்.

English

1. A Critical study of kuruntokai — C. Balasubramaniyan.

M. Litt. thesis submitted to the University of Madras-1963. XIV+299 pages.

Contents: Transliteration etc. Introduction. (i) The classification of sangam literature (ii) The age of kuRuntokai. (iii) The place of kuRuntokai. (iv) Special features (v) Historical settings. (vi) Social life of the ancient Tamil. (vii) The classification of akam and puRam. (viii) The theme of akam in kuRuntokai. (ix) The treatment of Nature. (x) How for kuRuntokai can be treated as pure literature. (xi) Figures of speech (xii) The names of the poets etc. (xiii) The dialectic elements in kuRuntokai.

2. A Philological study of kuRuntokai. — N. A. Kumarasamy Raja.

M. Litt theis, submitted throuh the Department of Linguistics, Annamalai University 1961. 125+2 (Bib)+218 (Dictionary) pages.

Contents: Phonology -- Phonemic sequences phonologic Alternations — Sandhi — Noun — Naminal in flexions — pronouns — Numerals — verbs — personal — Terminations — Moods — voice — Adverbs — Particles and word order.

3. The Interior Landscape — A. K. Ramanujan.

Peter Owen. London. First British commonwealth edition. 1970.

A translation work of 80 kuRuntokai verses into English. The 80 verses are, kuRuntokai 3, 6, 8, 11. 12, 15, 16, 17, 18, 24, 25, 28, 30, 31, 32, 33, 36, 40, 41, 42, 46, 47, 56, 61 66, 67, 68, 74, 75, 95, 97, 98, 99, 112, 119, 123. 124. 126. 130, 131, 136, 138, 142, 152, 153, 157, 176, 220, 221, 222, 223. 224, 226, 227. 234, 235, 243, 244, 263, 269, 271, 274, 275, 276, 281. 288, 290, 292, 293, 294, 295, 299, 312, 324. and 378,

Index of poets, A brief notes on the interior landscape, and the index of the first lines of the English verses of the book are also in addition to the translation work.

கட்டுரைகள்

1 **'அவர் போன வழி'** கி. வ. ஜகந்நாதன்.

"காவியமும் ஓவியமும்". முதற்பதிப்பு 1944. கலைமகள் வெளியீடு. சென்னை. 4. விலை. ரூ. 2-50. 85 பக்கங்கள். (ஓவியங்களுடன்)

'எறும்பி அளையிற்குறும்பல் அனைய' என்ற குறுந்தொகை 12 ஆம் பாடலின் நாடக விளக்கமாக அமைகின்றது இக்கட்டுரை.

2 **'அவள் வந்த வேளை'** — மா. ரா. இளங்கோவன்.

"குறிஞ்சிப்பாவை", சாந்தி நூலகம் சென்னை 1. முதற்பதிப்பு 1958 மார்ச்சு. விலை. ரூ. 2/- 127 பக்கங்கள்.

ஒரு குடும்பம் நல்ல முறையில் நடக்கின்றதெனின் அதன் காரணம் குடும்பத் தலைவியையே சேரும். 'எல்லாம் அவள் வந்த வேளை, அவன் உயர்ந்து விட்டான்' என்று உலகியலில் சாதாரணமாகப் பயன்படுத்தப்படுவதையே குறுந்தொகை 295 ஆம் பாடல் விளக்குகின்றது. என்பதைக் காரண காரியங்களுடன் தெளிவு படுத்தும் இலக்கிய நயக் கட்டுரை.

3 **'ஆச்சரியம்'** கி. வ. ஜகன்நாதன்.

"காவியமும் ஓவியமும்" முதற் பதிப்பு 1944. கலைமகள் வெளியீடு சென்னை 4. விலை. ரூ. 2-50. 85 பக்கங்கள் (ஓவியங்களுடன்)

சிறு வயதில் மாறுபட்ட கருத்துடையராய் ஒருவருக்கொருவர் வழக்கிடும் வழக்க முடையவராயிருந்த இருவர் பின் மணம் செய்து கருத்தொருமித்து வாழ்வதைக் கண்டவர் ஒருவர் ஆச்சரியமடைந்து விதியை வாழ்த்துவதாயமையும், 'இவன் இவள் ஐம்பால் பற்றவும்'. என்ற குறுந்தொகை 229 ஆம் பாடலுக்கு விளக்கம் கூறுவதாய் அமைகிறது இக்கட்டுரை.

4 **'ஆதிமந்திப் பாட்டு'** — ஆ. சிவலிங்கனார்.

செந்தமிழ்ச் செல்வி. தொகுதி 24: பக்கம் 470 — 472

குறுந்தொகை 31 ஆம் பாடலின் ஆசிரியர் ஆதிமருதியாரன்று ஆதிமந்தியாரே என்றும், இப் பாடலின்கண் ஆதிமந்தியார் தம் வரலாற்றினையே பாடியுள்ளார் என்றும், இது அகப்பொருட் சுவைபட அமைந்த பாடலாயினமையின் பெயர்வைத்துப் பாடப்பட வில்லை என்றும் கட்டுரையாளர் குறிக்கின்றார்.

5. **'இன்ப வாழ்வு'** — கி. வ. ஜகந்நாதன்.

"காவியமும் ஓவியமும்". மு. ப. 1944. கலைமகள் வெளியீடு. சென்னை 4. விலை. ரூ. 2-50/- 85 பக்கங்கள் (ஓவியங்களுடன்).

'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்' என்ற குறுந்தொகை 167-ஆம் பாட்டிலமைந்த இல்லற நிகழ்ச்சிகளை விளக்குவதாயமையும் கட்டுரை.

6. **'எருமணம்'** — எஸ். வையாபுரிப் பிள்ளை.

"இலக்கிய தீபம்". முதற்பதிப்பு 1952 நவம்பர். பாரி நிலையம், சென்னை.
விலை. ரூ. 3-00/- 117 முதல் 121 ஆம் பக்கம் வரை.

குறுந்தொகை 113 ஆம் பாடலில் 5-வது அடியிலுள்ள 'எருமணம்' என்ற சொல்லிற்கு 'கூந்தலிலுள்ள எண்ணெய்ப்பசை,' சிக்கு முதலிய போகும் பொருட்டு குளிக்கும் காலத்து தேய்க்கும் ஒருவகைக் களிமண்' என்று விசேட உரை குறிக்கின்றது. திரு. இராமநாதையர் என்பவர் 'எருமணம்' என்பதை 'ஏர்மணம்' என்று பாடம் கொண்டு மணமுள்ள மலர்கள் என்று பொருள் கொண்டார். இவை இரண்டுமே தவறு. எருமணம் என்பதற்குச் செங்கழுநீர் என்ற பொருள் பிங்கலநிகண்டில் குறிக்கப் படுகின்றது. இப்பொருளே பாடலில் பொருந்தி வருவதாய் அமைகின்றது என்கிறார் ஆசிரியர்.

7. **'என்ன வீரம்'** — ந. சஞ்சீவி. எம். ஏ.

"உணர்வின் எல்லை". பாரிநிலையம். சென்னை 1.
முதற்பதிப்பு 1959 டிசம்பர். விலை. ரூ. 3-50. 204 பக்கங்கள். 47 முதல் 58 பக்கம் வரை.

'கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி' என்ற குறுந்தொகை 80 ஆம் பாடலை விளக்குகிறது கட்டுரை. 'தலைவிக்கு, தலைவன் வேண்டுமாயின், நானும் தலைவனும் நாளை புனலாடப் போகும் பொழுது, அவளால் முடியுமானால் தன் சுற்றத்துடன் வந்து தலைவனை அழைத்துக் கொண்டு போகட்டும்' என்ற பரத்தையின் கூற்றை 'இவ்வுலகில் நல்லவர்களின் அடக்கமும், ஒழுக்கமும் பொல்லாதவர்களுடைய ஏளனத் திற்கும் வெற்றிக்கும் எளிதில் பயன்படுகின்றன' என்ற கருத்துடன் இணைத்தமை சிறப்பாய் அமைகின்றது.

8. **'ஒருநாள் மாலை'** — டாக்டர். மு. வரதராசன்.

"இலக்கியக் காட்சிகள்". பாரிநிலையம். சென்னை. முதற்பதிப்பு 1962 மே.
விலை. ரூ. 1-25. 85 பக்கங்கள்.

'ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து' என்ற குறுந்தொகை 92 ஆம் பாடலின் விளக்கமாக அமைகின்றது கட்டுரை. பறவைகளின் செயல்களைப் பற்றி விரிவாகவும், அறிவு பூர்வமாகவும் தருகின்றாரெனினும், பாடல் எந்த இலக்கியத்திலிருந்து எடுக்கப் பட்டது என்று கூறத் தவறியது ஒரு குறை.

9 **'கடவுள் வாழ்த்துப் பாடிய பெருந்தேவனார்'** N. சுப்பிரமணியன்

"Tamil Culture" vol. X No. 1. 1963. page 87—97.

குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, அகம், புறம் இவற்றின் கடவுள் வாழ்த்தைப் பாடிய பெருந்தேவனார் சங்ககாலப் புலவர். காக்கை பாடினியார் நச்செள் ளையார் போன்ற சிறப்புப் பெயர்கள் குறுந்தொகைச் செய்யுளால் வந்துள்ளது. எனவே

குறுந்தொகை பிற தொகை நூல்களுக்கு முன்பே தொகுக்கப்பட்டது. 8 அடிப்பேதெல்லையாகக் கொண்ட குறுந்தொகையில் 307, 391 ஆகிய செய்யுட்கள் 9 அடிகளாக அமைவதால் அவற்றை நீக்கிவிடின் கடவுள் வாழ்த்து நீங்கலாக 400 பாடல்களைக் கொண்டதாக அமையும் என்பர். இவை குறுந்தொகையைப் பற்றிக் குறிக்கும் சில செய்திகள்.

10 **'களிறும் குளிறும்'** — ஆ. சிவலிங்கனுர்.
"செந்தமிழ்ச் செல்வி 33." பக்கம் 563—565.

பரணரின் குறுந்தொகை 24ஆம் பாடலுக்கு, குளிரு? களிரு? என்ற (செ. செல்வி 23) செல்வ விநாயகத்தின் கட்டுரைக்கு மறுப்பாக அமைகின்றது இக் கட்டுரை. குழைதல் தலைவியினுடையதாகக் கொண்டால் எழுகளிறு மிதித்த பழம் போல அழிவதாகத் தலைவி தன்னைக் கூறிக் கொண்டாள் என்பது சிறக்காது. கொடியோர் நா குழைய என்று கொண்டால் எழுகளிறு மிதித்த பழம்போல உருவிழந்து கெடுக எனத் தலைவி கூறினுள் என்பதே சிறக்கும். எனவே களிறும், குளிறும் ஆகிய இரண்டும் கொள்ளலாம் என்பது கட்டுரையாளரின் துணிவு.

11. **'கவைமகன்'** — பி. எல். சாமி. பி. எஸ்ஸி.,
"செந்தமிழ்ச் செல்வி. 34". பக். 119—122.

குறுந்தொகை 324 ஆம் பாட்டில் 'கவைமகன் நஞ்சுண்டாங்கு' என்ற வரியில் 'கவைமகன்' என்பது ஒட்டிப் பிறக்கும் (Siamese twins) இரட்டைப் பிறவியைக் குறிக்கும். ஒரு மகவுண்ட நஞ்சு மறு மகவைத் தாக்கும் என்றும், சங்க இலக்கியங்களில் அகம் 257, 104, புறம். 322 ஆம் பாடல்களில் 'கவை' என்ற சொல்லாட்சி ஒட்டியுள்ள இரட்டை என்ற பொருளிலேயே வந்துள்ளமையையும் சான்று காட்டுகின்ருர் ஆசிரியர்.

12 **'காமமும் காதலும்'** — வே. கபிலன்.
"இலக்கியச் சோலை". அருணேதயம் வெளியீடு. சென்னை 14.
முதற்பதிப்பு 1968 மே. விலை. ரூ. 3-00. 156 பக்கங்கள்.

குறுந்தொகை 231ஆம் பாடலை அடிப்படையாகக் கொண்டு, காமம், காதல் என்பவற்றை விளக்குகிருர் ஆசிரியர். காதல் நிலைத்து நிற்பது. காமம் அழியுந் தன்மையுடையது, உடலுறவையே பெரிதாகக் கொள்வது என்று விளக்குகின்ருர் ஆசிரியர்.

13. **'காமமோ பெரிதே'** — கி. வ. ஜகந்நாதன்.
"காவியமும் ஓவியமும்". முதற்பதிப்பு. 1944. கலைமகள் வெளியீடு. சென்னை 4. விலை. ரூ. 2-50, 85 பக்கங்கள் (ஓவியங்களுடன்.)

'வேரல் வேலி வேர்க்கோட் பலவின்' என்ற குறுந்தொகை 18ஆம் பாடலுக்கு நாடக முறையில் விளக்கம் கூறுகின்றது இக்கட்டுரை.

14. **'காமமோ பெரிதே'** — அ. மு. பரமசிவானந்தம்.
"வெள்ளி விழாச் சொற்பொழிவுகள்" தமிழ்க்கலைப் பதிப்பகம். சென்னை 20.
முதற் பதிப்பு. 1966 மார்ச். விலை. ரூ. 3/- 180 பக்கம். 31 முதல் 57 வரை.

காமத்தின் தன்மையைக் குறுந்தொகை 18, 32, 204, 136, 290 ஆகிய பாடல்களையும், சில குறட்பாக்களையும் கொண்டு விளக்குகிறார் ஆசிரியர். காமம் என்ற சொல்லிற்கு ஆசிரியர் தரும் விளக்கமும், முன்னுரையும் பயனுடையனவாய் அமைகின்றன. காமம் என்ற சொல்லிற்கு 'நிறைவு தருவது' என்பதே பொருள் என்பதைக் குறுந்தொகைப் பாடல்களின் வழி உணர்த்துகின்றார் ஆசிரியர்.

15. **'கிழவியின் பிரயாணம்'** — கி. வ. ஜகந்நாதன்.
"காவியமும் ஓவியமும்". முதற்பதிப்பு 1944. கலைமகள் வெளியீடு. சென்னை 4.
விலை. ரூ. 2-50. 85 பக்கங்கள்.

'காலே பரிதப் பினவே...' என்று செவிலிகூற்றாய் வரும் குறுந்தொகைப் பாடலை நல்லமுறையில் விளக்கி நிற்கின்றது கட்டுரை.

16. **'குப்பைக் கோழி'** — மா. ரா. இளங்கோவன்.
"குறிஞ்சிப் பாவை". சாந்தி நூலகம், சென்னை 1. முதற்பதிப்பு 1958. மார்ச்சு.
விலை. ரூ. 2/- 127 பக்கங்கள்.

இரு சண்டைக் கோழிகள் தம்முள் போரிடும்போது அதை வேடிக்கை பார்க்கப் பலர் கூடுவர். தத்தம் கோழிகளுக்கு ஆதரவும் தருவர். ஆயின் சாதாரண மாகக் குப்பைமேட்டில் மேயும் கோழிகள் தம்முள் பொருதால் அதை வேடிக்கை பார்க்கவோ அதற்காதரவு தரவோ ஒருவரும் இரார். அதேபோல் தலைவனைப் பிரிந்த தலைவியின் துயர், குப்பைமேட்டுக் கோழிப்போர் போன்று அடக்குவாரின்றி இருக் கின்றது என்ற பொருளில் வரும் குறுந்தொகை 305ஆம் பாடலுக்கு விளக்கம் தரு கின்றது கட்டுரை. குப்பைக் கோழிச் சண்டையைத் தலைவியின் துயருக்கு உவமை யாகக் காட்டியமையாலேயே இப்பாடலாசிரியருக்குக் குப்பைக் கோழியார் என்ற பெயர் வழக்கில் வந்தது.

17 **'குளிறு? களிறு?'** — மாயூரம். திரு. சாமி. செல்வ விநாயகம்.
"செந்தமிழ்ச் செல்வி. 32." பக்கம் 583 — 584.

பரணரின் குறுந்தொகை 24ஆம் பாடலில் 'எழுகுளிறு மிதித்த ஒரு பழம் போல' என்பதை 'எழுகளிறு' என்று கொண்டால் சிறப்பாயிருக்கும் என ஐயாற்று நண்பர் ஒருவர் எழுதிய கட்டுரைக்கு மறுப்பாக, களிறு அடிப்பட்ட அத்திப்பழம் அழிந்து போகுமாதலின் 'குளிறு' என்று இங்கு நண்டைக் குறிப்பதே சரியானது என்று காட்டியுள்ளார். மேலும் அலர்தூற்றுவோர் நாவைக் கொடியோர் நாவு எனப் பழித்தல் நமக்கு வேடிக்கையாக உள்ளதென்றும் கூறி முடிப்பர். (ஐயாற்று நண்பர் யாரென்பதும், அவர்தம் கட்டுரை எங்கு எப்படி வெளியிடப்பட்டதும் ஆசிரியரால் குறிப்பிடப்பட வில்லை. அன்னார் தம் கட்டுரையும் நமக்குக் கிடைத்திலது,)

18 **'குறுந்தொகை'** — சோம. இளவரசு.
"இருபது நூற்றுண்டுகளில் தமிழ்", மணிவாசகர் நூலகம், சிதம்பரம், முதற் பதிப்பு 1970 மே. விலை ரூ. 3/- 170 பக்கங்கள்.

இந்நூலில் எட்டுத்தொகை என்ற மூன்றுவது தலைப்பில் 2 ஆம் பிரிவில் குறுந்தொகை பற்றிக் கூறுகின்றுர் ஆசிரியர். இதில் குறுந்தொகையின் சிறப்பியல்புகள் என்ற தலைப்பில் 9 கருத்துக்களைத் தருகின்றுர். உரையாசிரியர்களால் மிகுதியாக மேற்கோள் காட்டப்பட்ட பாடல்களை உடையது. தொகை நூல்களில் முதன் முதலாகத் தொகுக்கப்பட்டது. கவிதை என்றுல் என்ன என்பதற்கு எடுத்துக்காட்டாய் அமைவது. அகப்பொருள் இலக்கியங்களில் இனிமையும்' எளிமையும் தெளிவும் மிக்கது. என்பவை ஆசிரியர் காட்டும் சிறப்பியல்புகளில் சில. சுவை மிக்க சில பாடல்களையும், பாடலடிகளையும் எடுத்துக் காட்டியுள்ளமையும் குறிக்கத்தக்கது.

19 **'குறுந்தொகை'** — பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார்
"உரைநடைக் கோவை vol, II", பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி. எட்டாம் பதிப்பு 1965. 109 முதல் 132 ஆம் பக்கம் வரை.

சென்னையில் கூடிய குறுந்தொகை மாநாட்டில் நிகழ்த்திய தலைமையுரையின் சுருக்கமே இக்கட்டுரை குறுந்தொகையில் (1) உவமையழகு, (2) குண வருணனை, (3) தேற்று முறை, (4) உள்ளுறை, (5) மக்கள் மனநிலை, (6) காதலின் இயல்பு என்ற தலைப்புக்களில் கட்டுரை அமைந்துள்ளது.

20 **'குறுந்தொகை'** — அ. காமாட்சி குமாரசாமி. எம். ஏ.,
"இலக்கிய இன்பம்" பறம்பு நிலையம். சென்னை 1. முதற்பதிப்பு 24—1—1959. விலை. ரூ. 2/- 126 பக்கங்கள். 31 முதல் 40 வரை,

இக்கட்டுரையில் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற முறையில் அமைந்துள்ள குறுந்தொகையிலிருந்து சில பாடலை எடுத்து ஒரு கதைபோல் அமைத்துத் தருகின்றுர் ஆசிரியர்,

21 **'குறுந்தொகை'** — அ. குமாரசுவாமிப் பிள்ளை.
"செந்தமிழ் 14" பக்கம் 338—39.

அச்சிடப்பட்ட குறுந்தொகையில் பாடாந்தரங்களுக்குள்ளே சிலவற்றையும், உரையில் தோன்றும் வேறுபாடுகள் சிலவற்றையும் சுட்டுவதாய் அமைகின்றது கட்டுரை.

22 **'குறுந்தொகை'** — ச. சாமிமுத்து. எம். ஏ.,
"தமிழ் இலக்கிய வரலாறு" யுனைட்டெட் பப்ளிஷர்ஸ். திருச்சி. 2.
முதற்பதிப்பு 1962, நான்காம் பதிப்பு 1968. விலை. ரூ. 3-50. 340 பக்கங்கள்.

செய்திச் சுருக்கம்:— 4 முதல் 8 அடி வரையுள்ள அகத்திணைப் பாக்களைக் கொண்டது. 205 புலவர்கள் பாடினர். இதில் கடவுள் வாழ்த்தோடு 402 பாக்கள்

உள. சிலர் இதன் பாக்கள் 400 என்கின்றனர். இறையனுர் அகப்பொருளுரை ஆசிரியர் இந்நூலைக் 'குறுந்தொகை நானூறு' என்கின்ருர்... குறுந்தொகைப் பாக்கள் பலவும் எளிய இனிய பாக்கள். காதல் வாழ்வின் பல்வேறு நுட்பங்களை இலக்கிய நயத்தோடு எடுத்துக் கொடுக்கும் பாக்கள். சேந்தனுக்கு உறையூர் உரியதென்பதுவும், சேரன் கொல்லி மலைக்கு உரியான் என்பதுவும், எவ்வி பாணர்க்குப் பொற்பூப் பரிசிலாய் அளிப்போன் என்பதுவும், எழினி மள்ளர் மாற்ருர் முன்னணியைக் கெடுப்பர் என்பதுவும், அழிசிக்கு ஆர்க்காடு உரியதென்பதுவும், ஆய் பொதியிலுக்கு உரியான் என்பதுவும் இப்பாக்கள் நமக்கு வழங்கும் வரலாற்றுச் செய்திகள் என்று கூறி முடிக்கின்ருர்.

23 **'குறுந்தொகை'** — செலுவையர்.

"செந்தமிழ் 21" பக்கம் 341—342.

'நிலத்தினும் பெரிதே' என்ற குறுந்தொகை 3 ஆம் பாடலுக்கு, சௌரிப் பெருமாள் அரங்கசாமி ஐயங்கார் அவர்கள் எழுதிய உரை தவறு என்று கூறி இப் பாடலின் பொருள் இது என்று ஒரு பொருள் தருகின்ருர். சௌரி அரங்கசாமி ஐயங்கார் இப்பாடலுக்கு என்ன பொருள் கூறினுர், அது எவ்வகையில் தவறுடைத்து என்பதெதுவும் குறிப்பிடப்படவில்லை.

24 **'குறுந்தொகை'** — ஞா. சா. துரைசாமி பிள்ளை.

"தமிழ் இலக்கியம் — சங்ககாலம்" அசோசியேஷன் பிறஸ், கல்கத்தா. முதற் பதிப்பு 1923. 186 பக்கங்கள்

தமிழ் இலக்கிய வரலாறு பற்றிக் கூறும் முதல் நூலாகிய இந்நூலில் குறுந்தொகை பற்றிக் கூறும்பொழுது 'குறுந்தொகைச் செய்யுட்கள் நானூற்றென்றில் முல்லைத் திணைக்குரியன நாற்பத்தைந்து, மருதத்திற்குரியன நாற்பத்தாறு பாலைக் குரியன தொண்ணூற்று நான்கு, நெய்தலுக்குரியன எழுபது. குறிஞ்சிக்குரியன நூற்று நாற்பத்தாறு' என்ற செய்தி தரப்பட்டுள்ளது.

25 **'குறுந்தொகை'** — சி. பாலசுப்பிரமணியன்.

"இலக்கிய வரலாறு" பாரிநிலையம் சென்னை. முதற்பதிப்பு 1959. நான்காம் பதிப்பு 1964. விலை ரூ. 3-50. 275+8 பக்கங்கள்.

செய்திச் சுருக்கம்:- இது நல்ல குறுந்தொகை எனப் பாராட்டப்படும் சிறப்பினைப் பெற்றது. குறுந்தொகையில் இயற்பெயரும் சிறப்புப் பெயரும் ஒருங்கே அமையப் பெற்ற புலவர்களாக ஐந்து புலவர்களும், தம்பாடலிற் கூறிய உவமை நயத்தால் பெயர் பெற்றவர்களாய் பதினெண்மரும் காணப்படுகின்றனர். பரணர் பாடும் பாடல்கள் பெரும்பாலானவற்றில் அரிய வரலாற்றுக் குறிப்புக்களைக் காண்கிருேம். பல்வேறு பாடல்களிலே நீதிகள் பொதிந்து கிடக்கும் மாண்பினைக் காண்கிருேம். உவமையும், இறைச்சியும் பல பாடல்களில் காணக் கிடக்கின்றன.

26 'குறுந்தொகை' — கா. சு. பிள்ளை.

"இலக்கிய வரலாறு — முதற் பாகம்" கழக வெளியீடு. 1960. 269 பக்கங்கள்

ஆசிரியரின் குறிப்புகள்:- குறுந்தொகை என்பது அகத்திணைப் பாட்டுகளுள் நாலடி முதல் எட்டடி வரையுள்ள செய்யுட்களடங்கியவை. 205 புலவர்களால் பாடப்பட்ட பாடல்கள் இதன்கணுள்ளன. இத்தொகை தொகுப்பித்தவர் பூரிக்கோ. பல பண்டை வழக்கங்கள் இந்நூலினுலறியக் கிடப்பன. மகளிர் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டென்று கூறும் பாட்டும் இந்நூலின் கண்ணே உள்ளது. இயற்கை ஆராய்ச்சியைப் புலப்படுத்தும் பல கருத்துக்களும் உவமைகளும் நிறைந்தவை இப்பாடல்கள் என்று குறிக்கின்றுர் ஆசிரியர்.

27 'குறுந்தொகை' — எஸ். வையாபுரிப் பிள்ளை.

"இலக்கிய தீபம்". பாரிநிலையம், சென்னை. முதற்பதிப்பு 1952 நவம்பர்
விலை ரூ. 3/- 84 முதல் 109 வரையுள்ள பக்கங்கள்.

இக்கட்டுரையில் குறுந்தொகையின் இலக்கியநயம், அதற்கு உரையெழுதியோர், குறுந்தொகை பதிக்கப்பட்ட வரலாறு, முதற்பதிப்புக்களில் காணப்படும் பிழைகள் என்பவையும், குறுந்தொகை தொகுக்கப்பட்டதும், இயற்றப்பட்டதுமான காலங்களைப் பற்றியும் பேசப்பட்டுள்ளது. கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றுண்டு காலங்களில் இயற்றப்பட்டு, கி. பி. 4ஆம் நூற்ருண்டில் தொகுக்கப்பட்டதே குறுந்தொகை என்பது கட்டுரையாளர் முடிவு.

28 'குறுந்தொகை' — கி. வ. ஜகந்நாதன்.

"மஞ்சரி". மே 1974. பக்கம் 10—12.

அம்மூவனுரின் குறுந்தொகை இரண்டாம் பாட்டை விளக்கி, இப்பாடல் 'காதல் பிறவிதோறும் தொடர்வது' என்ற கருத்தைத் தருகின்றது என்பர். பின் குறுந்தொகையின் வரலாற்றைக் கூறி 'நிலத்தினும் பெரிதே' என்ற குறுந்தொகை 3ஆம் பாடலுக்கு உரைகூறி கட்டுரையை முடிக்கு ஆசிரியர் தாமே இதை ஓர் அறிமுகக் கட்டுரை என்று கூறிக்கொள்கிருர்.

29 'குறுந்தொகைக்கு யோகம்' — சி. சு. செல்லப்பா.

"எழுத்து" காலாண்டிதழ். ஏப்ரல் — ஜூன் 1968. ஏடு 112. பக்கம் 3—4.

ஏ. கே. ராமாநுஜம் அவர்களின் குறுந்தொகை ஆங்கில மொழிபெயர்ப்பை மதிப்பிடும் கட்டுரை. ஏ. கே. ராமாநுஜத்தின் சுருக்கமான வரலாறு ஒன்றும் இதில் தரப்பட்டுள்ளது.

'கவிதைகளை மூலத்திலும் மொழிபெயர்ப்பிலும் படிக்கிறபோது அச்சாவாக ஒத்திருப்பது மட்டுமல்ல கவிதைகளின் தொனியும் அப்படியே ஒத்திருக்கிறது. ராமாநுஜம் பொறுக்கி உபயோகித்துள்ள இங்கிலீஷ் சொற்களும், சொல் சேர்க்கையும், உணர்ச்சியைத் தக்கபடி எழுப்பத்தக்க தன்மை வாய்ந்தவைகளாக இருப்பதை உணர்

கிறேம்'... என்று பாராட்டும் சி. சு. செ. இம்மொழி பெயர்ப்பின் சில குறைகளையும் சுட்டத் தவறவில்லை. உதாரணமாக,

'பறைபடப் பணிலம் ஆர்ப்ப' என்ற வரிகளுக்குள்ள 'as the wedding drums thunder, and the conch shell trumpets blare' என்பதில் மூலத்தின் இறுக்கமும் சுருக்கமும் தொனியும் இல்லை. இதுபோல இன்னும் சில குறைகளைச் சுட்டிக் காட்டுகின்றார் ஆசிரியர். பொருளளவில் தரமான திறனாய்வுக் கட்டுரை.

30 **'குறுந்தொகைச் செய்யுளில் ஒரு சரித்திரக் குறிப்பு'** — எஸ். வையாபுரிப் பிள்ளை.

"இலக்கிய தீபம்". முதற்பதிப்பு 1952 நவம்பர். பாரி நிலையம், சென்னை. விலை. ரூ. 3-00. 108 முதல் 116ஆம் பக்கம் வரை.

குறுந்தொகை 75ஆம் செய்யுளின் 3ஆம் 4ஆம் வரிகளை

'வெண்கோட் டியானை பூஞ்சுனை படியும்
பொன்மலி பாடிலி பெறீஇயர்'

என்று திரு. அரங்கனார் பதிப்பித்து, அதற்கு உள்ளுறைப் பொருள் கொண்டு ஒரு உரையும் எழுதியுள்ளார். இது தவறு. உண்மையில்

'வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்'

என்பதே சரியான வரிகள் என்றும், சோணை நதிக்கரையில் கி. மு. 5 ஆம் நூற்றாண்டில் நிரூபிக்கப்பட்ட ஒரு தலைநகரமான பாடலிபுத்திரத்தையே இவ்வரிகள் குறிக்கின்றன என்பதுவும் இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றது.

31 **'குறுந்தொகையில் உரிச் சொற்கள்'** — நா. சேசாத்திரி.

"இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற நான்காவது கருத்தரங்க மலர்" திருவனந்தபுரம் 1972. பக். 411—414.

குறுந்தொகையில் 38 உரிச் சொற்கள் பயின்று வருகின்றன. அவை: நளி சாய், புலம்பு, வார், வை, தவ, யாணர், ஒழுகல், அலமரல், உயா, நன்று, ஆய், கருவி, வாள், மல்லல், வியல், தடவு, தா, வய, பேம், சிலைத்தல், சாயல், சேர், படர், செல்லல், கதழ், உரு, பணை, கவவு, நுணங்கு, உசா, கலி, கமம், பையுள், கய, தீர்தல், உரும், பாய், என்பன. இவற்றுள் நன்று, கேண்மை, வய, கய என்பதை குறுந்தொகையில் பெறும் பொருளை விளக்குகிறது கட்டுரை.

32 **'குறுந்தொகையில் ஒரு செய்யுள்'** — வித்துவான். மாசிலாமணி அம்மையார். எம். ஏ.

"செந்தமிழ்ச் செல்வி 19". பக். 515—16.

'யாயும் ஞாயும் யாராகியரோ' என்ற குறுந்தொகைப் பாடலின் நயம் விளக்கி, புலவரின் இயற்பெயர் மறைந்ததெனினும் பாடற்றொடர் கொண்டு 'செம்புலப் பெயநீரார்' என்றழைத்தல் மிகப் பொருத்தம் என்று கட்டுரையை முடிக்கின்றார்.

33 **'குறுந்தொகையில் குறிப்புப்பொருள்'** தே. சீனிவாசவரதன்.

"இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 1970ஆம் ஆண்டு திருச்சி நடத்திய இரண்டாவது கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை".

குறிப்புப் பொருள் எங்கே தோன்றும், எவ்வடிப்படையில் தோன்றும் என்பதைக் குறுந்தொகைப் பாடல் வழி ஆய்கின்றது கட்டுரை.

குறிப்புப் பொருள் சொல்லிலும், தொடரிலும், பாடல் முழுவதிலும் தோன்றும் என்று கூறி அவற்றிற்கு உதாரணமும்:

கருப்பொருள், உவமை, அயன்மை தோன்றக் கூறும் குறிப்பு என்றிவற்றின் அடிப்படையிலும் குறிப்புப் பொருள் தோன்றும் என்று கூறி அவற்றிற்கும் உதாரணமும் தந்து விளக்குகிறார்.

34 **'குறுந்தொகையில் பாலை பாடிய பெருங்கடுங்கோ'** — கு. குற்றாலம்.

"இளவேனில் — 1970". (கையெழுத்துப் பிரதி) கேரளப் பல்கலைக் கழக ஆசிரிய மாணவர் வெளியீடு.

பாலை பாடிய பெருங்கடுங்கோவன் சொல்நயம், பொருள்நயம் என்பவற்றையும், அவர் பாடல்களில் காணப்படும் அன்றை மக்களின் பழக்க வழக்கங்களையும் தொகுத்துத் தரும் இலக்கிய நயக்கட்டுரை.

35 **'குறுந்தொகையுரை'** — அ. கந்தசாமிப்பிள்ளை.

"செந்தமிழ் 17" 257 முதல் 259ம் பக்கம் வரை.

குறுந்தொகை 7ஆம் பாடலில் 'நல்லோர் யார்கொல் அளியர் தாமே, ஆரியர் கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி' என்ற வரிகளுக்கு, ஆரியர்க்கும் பறைக்கும் தொடர்பின்மையாலும், வடவரசரின் பறை விசேடமும், வழக்கமும் அறியப்படுதலானும், ஆரியர் என்பதற்கு ஆரிய வரசர் என்று உரைகாரர் குறித்திருப்பது பொருத்த[ம்] என்று கூறியமைகிறது கட்டுரை.

36 **'குறுந்தொகை யுரையாராய்ச்சியும் பாடாந்தரமும்'** — அ. கந்தசாமிப்பிள்ளை.

"செந்தமிழ் 14" பக்கம் 185—196.

குறுந்தொகை 7, 8, 57, 140, 157 ஆகிய பாடல்களுக்கு உரையும் ஆராய்ச்சிக் குறிப்புக்களும் கொடுக்கப்பட்டுள்ளது.

37 **'குறுந்தொகை மாநாடு'** — வ. சுப்பையா.

"செந்தமிழ்ச் செல்வி 18" பக்கம் 338—343

சென்னை, சிந்தாரிப் பேட்டை உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் 30—11—40, 1—12—40 வரை நடந்த மாநாட்டு நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தருகின்றது கட்டுரை.

றுந்தொகை — மொழிபெயர்ப்பு' — T. B கிருஷ்ணசாமி முதலியார்.
செந்தமிழ்ச் செல்வி 13" பக்கம் 279—280.

குறுந்தொகையின் முதல் இரண்டு பாடல்களையும், கடவுள் வாழ்த்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

39 'சங்க நூல்கள் தரும் செய்திகள்' — பி. எல். சாமி.
"செந்தமிழ்ச் செல்வி 27" பக்கம் 142.

'எழாலுற வீழ்ந்தெனக் கணவற்காணுது' என்ற குறுந்தொகை 151ஆம் பாடல் வரியை மேற்கோள் காட்டி எழால் என்ற சொல்லுக்கு வல்லூறு என்றும் மேலெழுநிலை (உச்சஸ்தாயி) என்றும் பொருள் இருந்ததாகவும், தற்காலத்தில் இதை—வல்லூறு—ராஜாளி என்று குறிப்பதாகவும் கூறுகின்றார்.

40 'சாட்சி ஏது' — அ. சீநிவாசராகவன்.
"புது மெருகு" மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை 1. முதற்பதிப்பு 1961.
விலை. ரூ. 3-00. 179 பக்கங்கள் (62—68).

களவுக் காலத்தில் காதலன் சொன்னபடி வராவிட்டால் அலட்சியமாக நடந்துகொண்டால், அன்பைத் தராமலிருந்தால், 'என்னை அவன் காதலித்தது உண்மைதான், ஆனல் அதை எப்படிக் காட்டுவேன்?' என்று பெண் மனம் திகைத்துப் புலம்புவதைப் படம் பிடித்துக்காட்டும் 'யாருமில்லைத்தானே கள்வன்' என்ற குறுந்தொகைப் பாடலை இதே பொருளில் A. E. Hous man எழுதிய ஆங்கிலக் கவிதையோடு ஒப்பிட்டு கட்டுரை அமைகின்றது. ஆங்கிலக் கவிதையைத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். ஆங்கில மூலமோ, மூலத் தலைப்போ தரப்படவில்லை.

41 'சிறுகோட்டுப் பெரும் பழம்' — க. குமரன்.
"செந்தமிழ்ச் செல்வி 27" பக்கம் 345—48.

'வேரல்வேலி வேர்க்கோட் பலவின்' என்ற கபிலரின் குறுந்தொகை 18ஆம் பாடலின் நயம் விளக்கும் கட்டுரை.

. 'சிறுதேர்' — வித்துவான். சொ. சிங்காரவேலன்.
"செந்தமிழ்ச் செல்வி 28" பக்கம் 177—182.

தும்பிசேர் கீரனுரின் குறுந்தொகை 61ஆம் பாடலுக்கு மெருகூட்டி ஓவியக் காட்சியாய் வடித்துத் தருகின்றார்.

43 'செம்புலப்பெயல்நீரார்' — எஸ். கண்ணன்.
"செந்தமிழ்ச் செல்வி 27" பக்கம் 183—84.

'யாயும் ஞாயும் யாராகியரோ' என்ற குறுந்தொகை 40ஆம் பாடலுக்கு நயம் விளக்குவதாயமைகின்றது. கட்டுரை. திருமதி. மாசிலாமணி அம்மையாரும் இதுபோலொரு கட்டுரை எழுதியமை குறிக்கத்தக்கது.

44 'தானே கள்வன்' — கி. வ. ஜகந்நாதன்.

"காவியமும் ஓவியமும்" கலைமகள் வெளியீடு, சென்னை 4. முதற்பதிப்பு 194
விலை ரூ. 2-50. 85 பக்கங்கள்.

'யாருமில்லை தானே கள்வன்' என்ற குறுந்தொகை 25ஆம் பாடலை நாடக அமைப்பில் விளக்குகின்றது கட்டுரை.

45 'துயிலாத காதலி' — கி. வ. ஜகந்நாதன்.

"முல்லை மணம்" அமுத நிலையம், சென்னை. முதற்பதிப்பு 1959 ஜனவரி.
140 பக்கங்கள் (107-115)

'நள்ளென் றன்றே யாமம்' என்று தொடங்கும் குறுந்தொகை 6ஆம் பாடல் எழுந்த சூழல்களை விளக்கித் தலைவியின் துயரத்தைக் காட்டுகிறார்.

46 'தேயும் உயிர்' — கி. வ. ஜகந்நாதன்.

"காவியமும் ஓவியமும்". கலைமகள் வெளியீடு. சென்னை 4. முதற்பதிப்பு 1944.
விலை ரூ. 2-50. 85 பக்கங்கள்

'காமம் தாங்குமதி என்போர்' என்ற குறுந்தொகை 290ஆம் பாடலின் பொருளைக் கூறுகின்றது இக்கட்டுரை. பாடலாசிரியரான கல்பொரு சிறுநுரையாரின் பெயர்க் காரணமும் இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

47 'நட்பின் உயர்வு' — வே. கபிலன்.

"இலக்கியச் சோலை" அருணோதயம் வெளியீடு. சென்னை 14.
முதற்பதிப்பு 1968 மே. விலை. ரூ. 3-00. 156 பக்கங்கள் (58).

'அமிழ்தத் தன்ன அம்தீங் கிளவி' என்ற குறுந்தொகை 206ஆம் பாடலை அடிப்படையாகக் கொண்டு; இரு நண்பர்கள் உரையாடுவதாயும்; அவர்களுக்குள் ஊடல் தோன்றுவதாயும் கற்பனை செய்து கட்டுரையை நடத்திச் செல்கின்ற ஆசிரியர்.

48 'நல்ல குறுந்தொகை' — வி. மரிய அந்தோணி.

"இலக்கிய உலகம்". பூங்கொடி பதிப்பகம், விருதுநகர் 1962, 1967.
விலை ரூ, 2-50. 147 பக்கங்கள்.

அமர்ந்த காதலர், பார்ப்பனப் பாங்கன், ஆருயிர்த் தோழி, நோயும் மருந்தும், உடன்போக்கு, செவிலியின் துடிப்பு, இல்லற மாண்பு, பொருட் பிரிவு, பரத்தையிற் பிரிவு என்ற தலைப்புக்களில் ஒன்றோடொன்று தொடர்புடைத்தாய், ஒரு தொடர் நிகழ்ச்சியாய் கட்டுரையை அமைத்துச் செல்கின்றார் ஆசிரியர். இலக்கிய நயம் விளக்கும் கட்டுரையாய் அமைகின்றது.

49 'நற்றிணை — குறுந்தொகை — ஐங்குறுநூறு யாப்பு ஒரு குறிப்பு' — அன்னி தாமசு.

"கேரளப் பல்கலைக் கழக ஆய்வாளர் கருத்தரங்கில் படிக்கப்பட்டு தட்டச்சு செய்யப்பட்ட கட்டுரை"

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு இவற்றின் புற அமைப்பை ஆய்கிறது கட்டுரை. பொருட் தேர்ச்சியில் ஒப்புமையுடைய இந்நூற்கள் புறநிலையமைப்பிலும் அகவற்பாவுருக் கொண்டு தம்முள் இணைவு காட்டுகின்றன என்பது கட்டுரையாளர் முடிவு.

50 'நெஞ்சில் ஒரு நெருஞ்சி' — டாக்டர். கு. ஆறுமுகன்.

"லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டு மலர் 1972—73"

'நோம் என் நெஞ்சே' என்ற குறுந்தொகை 202ஆம் பாடலுக்கு விளக்கம் கூறுவதாயமைகின்றது இக்கட்டுரை. 'நெருஞ்சி உணர்த்திய உண்மை' என்ற தலைப்பில் டாக்டர். மு. வ. எழுதியுள்ள கட்டுரை இங்கு நோக்கத்தக்கது.

51 'நெருஞ்சி உணர்த்திய உண்மை' — டாக்டர். மு. வரதராசன்.

"இலக்கியக் காட்சிகள்". பாரி நிலையம், சென்னை. முதற்பதிப்பு 1962 மே. விலை ரூ. 1-25. 85 பக்கங்கள்.

அழகாகத் தோன்றும் நெருஞ்சிப் பூக்கள் முட்களாய்த் தோன்றி, காலை வருத்துதல்போல், இனியனாய் இருந்த காதலன் இன்னா செய்தலை எண்ணி வருந்தும் தலைவியின் கூற்றாயமைந்த 'நோம் என் நெஞ்சே' என்ற குறுந்தொகை 202ஆம் பாடலின் விளக்கமாக அமைகின்றது இக்கட்டுரை.

52 'பாடுக பாட்டே' — ந. சஞ்சீவி. எம். ஏ.

"உணர்வின் எல்லை", பாரி நிலையம், சென்னை. முதற்பதிப்பு 1959 டிசம்பர். விலை ரூ. 3-50. 204 பக்கங்கள் (25-30)

'அகவன் மகளே அகவன் மகளே' என்ற குறுந்தொகை 23ஆம் பாடலை ஒரு ஓரங்க நாடகம்போல் விளக்கிச் செல்கிறார் கட்டுரையாளர்.

'வயிற்று துன்பம் — பசி — இதைப் போக்க என்ன பாடு பட வேண்டியிருக்கிறது! யாரேனும் குறிசொல்லவாவது அழைக்கமாட்டார்களா? என்று ஆவலோடு நடந்து கொண்டிருந்த அந்தக் கிழவியை; மனத்துன்பம் — கவலை இதைத் தொலைக்க என்ன பாடு — யாரேனும் குறிசொல்லவாவது வர மாட்டார்களா? என்று ஏக்கத்தோடு இருந்த இளம்பெண் ஒருத்தி வெளியே வந்து பரபரப்புடன் கூப்பிடுகின்றாள்' என்று அகவன் மகளையும், தோழியையும் ஆசிரியர் அறிமுகப்படுத்தும் பாங்கு சிறக்கிறது

53 **'பிரிவரிதாகிய தண்டாக் காமம்'** — டாக்டர். மொ. அ. துரைஅரங்கனார்.
'இலக்கியக் கட்டுரைகள்''. ஸ்டார் பிரசுரம், சென்னை 5. முதற்பதிப்பு 12—1—1953.
விலை ரூ. 2-50. 166 பக்கங்கள் (65-80)

'பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன' என்று தொடங்கும் குறுந்தொகை 57ஆம் பாடலை தலைவன் — தலைவி இருவரின் உரையாடலின் மூலம் விளக்குகிறார். 'இப்பாடலில் வரும் 'பிரிவரிதாகிய தண்டாக் காமம்' என்பதற்கு மெய்யுறு புணர்ச்சி என்று பொருள் கூறுவது தவறு என்றும், 'இரண்டெனப் பிரித்துக் கூறப்படாததாய் நிற்கும் குறைவிலா நிறை' என்பதே சரியான பொருள் என்றும் விளக்குகிறார். காமம், காதல், அன்பு என்ற சொற்களில் ஆராய்ச்சியும் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளமை குறிக்கத்தக்கது.

54 **'புதிய சிறப்புப் பெயர்கள்'** -- டாக்டர். வ. சுப. மாணிக்கம்
''இந்தியப் பல்கலைக் கழக தமிழாசிரியர் மன்ற நான்காவது கருத்தரங்க மலர் — திருவனந்தபுரம் 1972'' பக்கம் 160—166.

சங்கப் பாடல்களில் 102 பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் கிடைக்கவில்லை. சிறந்த தொடர்களைக் கொண்டு ஆசிரியருக்குப் பெயரிடும் மரபு அன்று நிலவியதை அடிப்படையாகக் கொண்டு பெயர்தெரியாப் புலவர்க்குப் பெயரிட முயற்சி செய்கின்றார் ஆசிரியர். பெயர் தெரியாத 10 குறுந்தொகைப் பாடலாசிரியர்களுக்கு பொம்மலோதியார் (குறு. 191) நீலமென் சிறையார் (201) மாக்கொடி யறுகையார் (256) நீத்துநீரிருங்கழியார் (313) மலைச்செஞ் சாந்தினார் (321) துணைத்த கோதையார் (326) பானாள் யாமத்தார் (375) பழங்குழியார் (379) அல்லல் நெஞ்சினார் (381) நிறையொல்லாதார் (395) என்று பெயர் கொடுத்துள்ளார். நல்ல முயற்சி.

55 **'பெயர் சொல்லாப் பெரும்புலவர்'** — கி. இரா. திருமலையப்பன்.
''செந்தமிழ்ச் செல்வி 34'' பக்கம் 541—542.

குறுந்தொகை 313ஆம் பாடல், 'பெருங்கடல் கரையது சிறுவெண் காக்கை' என்று துவங்குகிறது. ஆசிரியர் பெயர் தெரியா இப்பாடலை இயற்றியவர் 'ஐயூர் முடவனார்' என்று சிலர் கருதுவர். ஆயின் இப்பாடலின் முதல் மூன்றடிகளும் ஐங்குறுநூறு 162ஆம் பாடலின் முதல் மூன்றடிகளோடு ஒத்திருப்பதால், அவ்வைங்குறுநூற்றாசிரியரான அம்மூவனார் பதினொரு பாடல்கள் பாடியிருக்கலாமென்றும், அவற்றில் பத்துப் பாடல்களை ஐங்குறு நூற்றிலும் எஞ்சிய ஒன்றைக் குறுந்தொகையிலும் சேர்த்திருக்க வாய்ப்புண்டு. எனவே குறுந்தொகை 313ஆம் பாடலை எழுதியவர் அம்மூவனார் என்று கொள்ளலாம் என்கிறார் கட்டுரையாசிரியர்.

56 **'பெயர் சொல்லாப் பெரும் புலவர்'** — பாப்பு இராமனுதன்.
''செந்தமிழ்ச் செல்வி 33'' பக்கம் 451—454.

குறுந்தொகை 228, 256 ஆகிய பாடல்கள் ஒரு புலவரால் பாடப்பட்டிருக்க வேண்டுமென்றும், அவர் ஐயூர் முடவனாராக இருக்கலாமென்றும் கருத வாய்ப்புண்டு.

குறுந்தொகையில் அணிலாடு முன்றிலார், நெடு வெண்ணிலவினர், மீனெறி தூண்டிலார் என்போர் பாடலால் பெயர் பெற்றதுபோல், இவ்வையூர் முடவனாரையும் சிறுவெண்பல்லியனர் என்ற புனைபெயரைக் கொள்ளலாமென்றும் சிறுவெண்பல்லியென வரும் பாடலையும் காக்கை பாடினியாரே பாடியிருக்கலாமென்றும் ஆசிரியர் கருதுவர்.

57 **'பொருத்தமான உவமை'** — ந. சஞ்சீவி. எம். ஏ.
"உணர்வின் எல்லை". பாரி நிலையம், சென்னை. முதற்பதிப்பு 1959 டிசம்பர் விலை. ரூ. 3-50. 204 பக்கங்கள். (59—75)

'கன்றுதன் பயமுலை மாந்த' எனும் குறுந்தொகை 225ஆம் பாடலுக்கு விளக்கம் தருகிறது கட்டுரை. இப்பாட்டில் வரும் 'கெட்டிடத் துவந்த உதவி கட்டில், வீறு பெற்று மறந்த மன்னன்போல, நன்றி மறந்த...' என்று உவமைக்காக எடுத்தாளப்பட்ட வரிகள், இன்று போலவே அன்றும் அரசியலில் நன்றி கொன்ற செய்கை இருந்தது என்பதற்குச் சான்றாய் நிற்கின்றன என்று கூறுகின்றார் ஆசிரியர்.

58 **'மந்தியின் மாண்பு'** — வே. கபிலன்.
"இலக்கியச் சோலை", அருணோதயம் வெளியீடு, சென்னை 14.
முதற்பதிப்பு 1968 மே. விலை ரூ. 3-00. 156 பக்கங்கள்.

தன் கடுவன் இறப்பத் தன் குட்டியைச் சுற்றத்திடம் விட்டு வரைபாய்ந்து மாய்ந்த நிகழ்ச்சியை விளக்கும் 'கருங்கண் தாக்கலை பெரும் பிறிது உற்றென என்ற குறுந்தொகை 69ஆம் பாடலை விளக்குகிறது கட்டுரை.

59 **'மனையின் மாண்பு'** — ந. சுப்பிரமணியன்.
"செந்தமிழ்ச் செல்வி 30" 121—122 பக்கங்கள்.

'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்' என்ற கூடலூர் கிழாரின் குறுந்தொகை 167ஆம் பாடலின் நயம் இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

60 **'யாமம்'** — மு. இராசாக்கண்ணு முதலியார்.
"செந்தமிழ்ச் செல்வி 19" பக்கம் 290—297.

சங்க காலத்தில் சிறுபொழுது ஐந்து என்ற கொள்கை வலியுற்றிருந்தது என்பதனைக் குறுந்தொகை 32ஆம் செய்யுள் அறிவிப்பதாக கட்டுரையின் முதற்பகுதியில் கூறுகின்றார். அடுத்துள்ள பகுதியில் பிற தொகை நூற்களின் கருத்துக்களைத் தருகின்றார் ஆசிரியர்.

61 **'வல்லவன்'** — ந. சஞ்சீவி. எம். ஏ.
"உணர்வின் எல்லை". பாரிநிலையம். சென்னை. முதற்பதிப்பு 1959 டிசம்பர். விலை ரூ. 3-50 204 பக்கங்கள் (36-46)

'இரண்டறி கள்வி நம் காதலோளே' என்ற குறுந்தொகை 312ஆம் பாடலை விளக்கி பாடலில் வரும் தலைவி, களவுக் காலத்தில் தலைவனிடம் தனியளாய்ச் செலும்

போது அவனை மகிழ்வித்து அவனுக்கு இனியளாய் இருந்து, பின்னர் பலர் ந அவனைக் கணுதவள் போன்று நின்று தன் காதல் உள்ளத்தைப் பிறரிடம் மறைத் தற்கும் வல்லாளாய் இருத்தல் போன்று தமிழரும் நல்லவராய் இருப்பதோடு பிறரிடம் வல்லாராயும் இருத்தல் வேண்டும் என்று முடிகிறது கட்டுரை.

62 **'வாழ்த்தும் வசையும்'** — மா. ரா. இளங்கோவன்.

"குறிஞ்சிப்பாவை" சாந்தி நூலகம், சென்னை 1. முதற்பதிப்பு 1958 மார்ச்சு. விலை. ரூ. 2/- 127 பக்கங்கள்

'மண்ணிய சென்ற வொண்ணுதல் அரிவை' என்ற குறுந்தொகை 292ஆம் பாடலையும் 'அரும் பெறல் அமிழ்தம் ஆர்பதமாக' என்ற குறுந்தொகை 83ஆ பாடலையும் தொடர்பு படுத்திக் காணும் ஒரு இலக்கிய நயக் கட்டுரை.

Articles in English

1 **'KuRuntokai'** — *J. M. Somasundarum Pillai.*

"A history of Tamil Literature". 1967. Published by the author. 424 pages. Price Rs. 12/-

Authors note in brief:- 'KuRuntokai literally means a collection of short poems. Out of the 203 poets 15 were poetesses. There was an ancient gloss on the work by per-ā siriyar for 380 stanzas. Nacihinā rkkiniyar completed it for the rest of the twenty verses. Unfortunately, both the glosses are now lost. Of the 203 poets we find many Chera royal descents.

2. **'KuRuntokai – a histotical interpretation'** — *M. Arokiasamy.*
"Journal of Madras University, Section – A, Humanities – 32, Jan. 1961. Page 359—394.

Sources from 'Tamil abroad', by Father. Taninayakam Adigal.

3. **'Men must work and women must weep'**
— *A. V. Subramanian, B. Sc., B. T*

"Sip from the sangam Cup". kazhagam Publication 1st edition 1968 Jan Price Rs. 8-00, 231 pages. pp. 18-20

In this article, the author discribes about the family life of the sangam people with the help of to kuRuntokai poems. (kuRu. 135 and 242.)

k is nothing but a translation of the Tamil gloss of the two poems ish.

'The age of KuRuntokai' — *Dr. C. Bala Subramaniyan.*

"An insight into Tamilology". Dr. T. E. Gnanamurthy 61st Birth day commemoration volume. Edited by R. Chandrasekaran and K. P. Ganesan. First edition 1972 August. Price Rs. 8/- 155 pages. pp. *121—133.*

The period of the whole sangam literature (tokai and paaTTu) is stly fixed. And the author ends the treatise like this. It is therefore r— that the cankam period begins from the fifth century B. C. and bout the fourth century A. D. and the poems of kuRunthokai may nsidered to belong this age.

5. **'The KuRunthokai Anthology'** — *H. S. David.*

"Tamil Culture" Vol. VII. No. 4. October 1958, pp, *323—349.*

In this essay the author discusses about, the authors of kuRuntokai, ent and form of the kuRuntokai poems, the probable time of their origin nd the manners of the compilation of the several poems in to the present nthology. The fifth part of this treatise, the clothing of women in the kuRuntokai is an interesting one.

This is the only treatise which deals with kuRuntokai fully as well as clearly.

6. **'The moods of Lovers'** — *A. V. Subramaniyan. B. Sc. B. T.*

"Sip from the sangam cup" kazhakam publication. First edition *1968* January. price Rs. 8/- 231 pages. pp. 54—58.

The English translation of the gloss of kuRuntokai *41, 126* and *251*

7. **'The mothers'** — *A. V. Subramaniyan B. Sc. B. T.*

"Sip from the sangam cup" kazhakam publication. First edition 1968 January. Price Rs. 8/- *231* pages, pp. *21—27.*

In this the author picturous the mothers treated by the sangam poets. Of the references cited in the essay kuRuntokai has its own four, ie. kuRuntokai 44, 84, *167* and 242.

8. 'The Psychological Symbolism of Paalai in kuRunt oka

— *Lalitha Sar*

"Proceedings of the Second international conference Seminar of . studies" edited by R. E. Asher Vol. II Madras 1968, pp. 25—33

Symbolism which reflects the psychological state and reaction the lovers and those associated with them in the Paalai (*90* poems) kuRuntokai is examined in this article. Contents: *1*. Terrain. 2. Temperat 3. Water scarcity. 4. Winds. 5. Vegetation. 6. Fauna and Anifanuna. 7. Peo 8. Other Types of symbolism.

பின்னிணைப்பு

குறுந்தொகைப் பாடல்கள் எண்ணிக்கை:

கடவுள் வாழ்த்தோடு 403. எட்டடிப் பேரெல்லை கடந்த குறு. 307, 391ஆ பாடல்களை நீக்கி விடின் கடவு வாழ்த்து நீங்கலாக 400 பாடல்கள்.

மொத்த வரிகள்		—	2503
பாடிய புலவர்கள்		—	205
பெண்பாற் புலவர்		—	15
பெயர் அறியாதவர்		—	10
உவமையால் பெயர் பெற்றோர்		—	18
ஐந்திணையில்	குறிஞ்சி	—	146
	முல்லை	—	45
	மருதம்	—	46
	நெய்தல்	—	70
	பாலை	—	94

தயாரித்தோர் — திரு. அ. திருமால் இந்திரசிங், ஆய்வாளர்.
— திரு. அ. இராசேந்திரன், ஆய்வாளர்.